# ‘நம்மவர் தொழிற்சங்கப் பேரவை’யின் இலவச மருத்துவ முகாம் மற்றும் முதல் பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பு!

**30-10-2021**

**வணக்கம்,**

மக்கள் நீதி மய்யத்தின் ‘நம்மவர் தொழிற்சங்கப் பேரவை’யின் முதல் பொதுக்குழு மற்றும் டாக்டர் திரு.கமல் ஹாசன் அவர்களின் 67வது பிறந்த நாளை முன்னிட்டு தொழிலாளர்களின் நலன் காக்க இருதயம் மற்றும் பொதுமருத்துவம் தொடர்பான மாபெரும் இலவச மருத்துவ முகாம் ஆகியவை, பேரவைத் தலைவர் சு.ஆ.பொன்னுசாமி அவர்களின் தலைமையில், மக்கள் நீதி மய்யம் துணைத் தலைவர்கள் திரு.A.G.மௌரியா I.P.S, (ஓய்வு) மற்றும் ஆர்.தங்கவேலு ஆகியோர் முன்னிலையில் 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறுகின்றன.

காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறவுள்ள இலவச சிறப்பு மருத்துவ முகாமை, மக்கள் நீதி மய்யம் நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி.ஸ்ரீப்ரியா அவர்கள் துவக்கிவைக்க உள்ளார். இருதய சிகிச்சையில் தலைசிறந்த மருத்துவரான திரு.சு.ரகுபதி அவர்களின் தலைமையிலான மருத்துவக் குழுவினர் இருதயம் மற்றும் பொதுமருத்துவப் பரிசோதனைகள் செய்து, தகுந்த மருத்துவ ஆலோசனைகளோடு மருந்துகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட இருக்கிறது.

அன்று மாலை 4 மணிக்கு தொடங்கும் ‘நம்மவர் தொழிற்சங்கப் பேரவை’யின் முதல் பொதுக்குழுவில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் திரு.கமல் ஹாசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற இருக்கிறார். பொதுக்குழுவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊடகப் பிரிவு,
மக்கள் நீதி மய்யம்.